தொகுதி மறுசீரமைப்புத் திட்டங்களை அரசியல் கட்சிகளுடன் பகிருங்கள்

பிரதமர் மோடிக்கு கார்கே கடிதம்

புது தில்லி, ஆக. 27: தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான மத்திய அரசின் திட்டங்களை அனைத்துக் கட்சிகளுடனும் பகிர்ந்து கொள்ளும்படி பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வியாழக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தொகுதி மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து ஆலோசிக்க அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று ஏற்கெனவே கடந்த ஜூன் மாதம் 16-ஆம் தேதி உங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன்.

இந்நிலையில், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரை கூட்டும் திட்டம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

எனவே, தொகுதி மறுசீரமைப்பு திட்டம்தொடர்பானமசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும் முன்பு, அது குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். அதேபோல், தொகுதி மறுசீரமைப்புத் திட்டங்களை அரசியல் கட்சிகளுடன் பகிர வேண்டும் என்றும், அதைப் படித்து தெரிந்துகொள்ள அரசியல் கட்சிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களவையில் தற்போது மொத்த எம்.பி.க்களின் பலம் 543-ஆக உள்ளது. இதே எண்ணிக்கையை அடுத்த 25 ஆண்டுகளுக்கு தொடர வேண்டும் என்றும், தற்போது மக்களவையில் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் இருப்பது போன்ற பிரதிநிதித்துவம் தொடர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

மேலும், மகளிருக்கு 3-இல் ஒரு பங்கு இடஒதுக்கீடு அளிப்பதை 2029-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்பு அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கிறேன். இதை விட்டுவிட்டு, ஏற்கெனவே கடந்த ஏப்ரல் 16, 17-ஆம் தேதிகளில் செய்தது போன்று மீண்டும் புல்டோசர் மூலம் தகர்த்து முன்னேறும் முயற்சியில் ஈடுபடாதீர்கள் என்று கார்கே குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் போது ஏப்ரல் 17-ஆம் தேதி தொகுதி மறுசீரமைப்பு சட்டத் திருத்த மசோதா, மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்தது. மக்களவையில் மொத்தமுள்ள 528 எம்.பி.க்களில் 298 பேர் மசோதாவுக்கு ஆதரவாகவாக்களித்தனர். 230 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

மசோதாவை நிறைவேற்ற மூன்றில் இருபங்கான 352 எம்.பி.க்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், அதைவிடக் குறைவான எம்.பி.க்களே ஆதரித்ததால் அது தோல்வியடைந்தது. இது மத்திய பாஜக அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவாக கருதப்பட்டது.

ஆவடியில் ஆண்டுதோறும் 150 பீரங்கி வாகனங்கள் சீரமைப்பு

அமைச்சர் ராஜ்நாத் சிங் தகவல்

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரில் உள்ள ராணுவ கனரக வாகன தயாரிப்பு ஆலையில் புதிதாக தயாரிக்கப்பட்ட ராணுவ வாகனத்தை வியாழக்கிழமை பார்வையிட்ட பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

ஜபல்பூர், ஆக. 27: சென்னை ஆவடி கனரக வாகனத் தொழிற்சாலையில் ஆண்டுதோறும் 150 பீரங்கி வாகனங்கள் சீரமைக்கப்பட்டு வருவதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரில் உள்ள ராணுவ கனரக வாகன தயாரிப்பு ஆலை வளாகத்தில் டி-பிரிவு பீரங்கி வாகனங்கள் சீரமைப்பதற்காக ரூ.472 கோடியில் அமைக்கப்படும் புதிய ஆலைக்கு ராஜ்நாத் சிங் புதன்கிழமை அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: நமது ராணுவம் உலகின் மிகவும் சக்திவாய்ந்த படைகளில் ஒன்றாகும்.

டி-72 மற்றும் டி-90 பீரங்கி வாகனங்கள் தரைவழிப் போரில் மிக முக்கியமானவை. எல்லைகளில் நாம் நிறுத்தியுள்ள பீரங்கி வாகனங்கள் இரும்புச் சுவர்கள் போல செயல்படுகின்றன. அவை எதிரிகளுக்கு மரண எச்சரிக்கையாக இருப்பதுடன், முன்களப் பகுதிகளில் பணியாற்றும் வீரர்களின் மன உறுதியையும் அதிகரிக்கின்றன.

தற்போது, ட்ரோன், ஏவுகணைகளின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையிலும், தரைவழிப் போரில் பீரங்கி வாகனங்கள் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஜபல்பூரில் 57 ஆண்டுகளாகச் செயல்பட்டுவரும் ராணுவ கனரக வாகனத் தொழிற்சாலை வளாகத்தில், டி பிரிவு ராணுவ பீரங்கி வாகனங்களை முழுமையாகப் பராமரித்து புதுப்பிக்கும் பணிக்காக ரூ.472 கோடி மதிப்பிலான புதிய மையம் அமைக்கப்படுகிறது.

மற்ற ராணுவ உபகரணங்களைப் போலவே பீரங்கி வாகனங்களை செயல்பாட்டுக்கு தயார் நிலையில் வைக்க வழக்கமான பராமரிப்பும், குறிப்பிட்ட கால இடைவெளியில் முழுமையான சீரமைப்பும் தேவைப்படுகிறது.

தற்போது திட்டமிடப்பட்டுள்ள புதிய ஆலையில் ஆண்டுதோறும் எண்பது என்ற எண்ணிக்கையில் டி-72, டி-90 பீரங்கி வாகனங்கள் முழுமையாகச் சீரமைக்க முடியும். இந்திய ராணுவத்துக்கு ஆண்டுதோறும் இது போன்ற சுமார் 230 பீரங்கி வாகனங்கள் சீரமைக்க வேண்டிய தேவை உள்ளது.

ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலை தற்போது ஆண்டுக்கு சுமார் 150 பீரங்கி வாகனங்களைச் சீரமைத்து வருகிறது.

ஜபல்பூர் அமைக்கப்படவுள்ள புதிய மையம், மீதமுள்ள தேவையைப் பூர்த்தி செய்யும். நமக்கு ட்ரோன்கள், ஏவுகணைகள், பீரங்கிகள், மின்னணுப் போர் முறைகளுடன் நவீன பீரங்கி வாகனங்கள் கண்டிப்பாகத் தேவை என்றார்.

உத்தர பிரதேசத்தில் பயிற்சி விமானம் கங்கை நதிக்கரையோரம் விழுந்து விபத்து

விமானி உள்பட இருவர் உயிரிழப்பு

கான்பூரில் கங்கை நதிக் கரையோரம் விழுந்து விபத்துக்குள்ளான பயிற்சி விமானத்தை ஆய்வு செய்த போலீஸார் மற்றும் அதிகாரிகள்.

கான்பூர், ஆக. 27: உத்தர பிரதேசத்தில் பயிற்சி விமானம், கங்கை நதிக்கரையோரம் விழுந்து விபத்துக்குள்ளானதில் விமானி உள்பட இருவர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து உத்தர பிரதேச காவல் துறை மூத்த அதிகாரி கூறியதாவது: கான்பூர் விமான நிலையத்தில் இருந்து கார்க் ஏவியேஷன் நிறுவனத்தால் இயக்கப்படும் தெஹ்நாம் விமானம் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு புறப்பட்டது. அந்த விமானம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 20 நிமிடங்களில் காத்ரி பகுதியில் உள்ள நாதபுர்வா கிராமம் அருகே கங்கை நதிக்கரையோரம் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் கர்நாடகத்தைச் சேர்ந்த பயிற்சி விமானி அபிஷேக் புஜாரி, பயிற்சியாளரான குஜராத்தை சேர்ந்த சச்சின் பாட்டியா ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதில் பாட்டியா சுமார் 3,000 மணி நேரம் வானில் விமானத்தை இயக்கிய அனுபவம் கொண்டவராவார். விமான விபத்துக்கு என்ன காரணம் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

விமான விபத்து குறித்த தகவலின்பேரில் காவல் துறையினரும், தீயணைப்புத் துறையினரும் சம்பவ இடம் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்துக்குள்ளான விமானம், இரட்டை என்ஜின் கொண்டது. சம்பவ இடத்தில் விமானம் பல பகுதிகளாக உடைந்து சிதறிக் கிடந்தது. விமானிகளுக்கான இருக்கையும் வெளியே கிடந்தது. இதனால் விபத்தின்போது உயிர் பிழைப்பதற்காக விமானி தப்பிக்க முயற்சித்தாரா என்று தெரியவில்லை. கான்பூர் விமான விபத்து குறித்து மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

விமான விபத்து விசாரணை வாரியம் (ஏஏஐபி) விசாரணை நடத்தும் என்றும், விசாரணைக்குப் பிறகே விபத்துக்கான காரணம் தெரிய வரும் என்றும் மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஆந்திரம்: பேருந்து-ஆட்டோ மோதல்; 7 பேர் உயிரிழப்பு

சிலகலூரிபேட் (ஆந்திரம்), ஆக. 27: ஆந்திரத்தின் பல்நாடு மாவட்டத்தில் தனியார் பேருந்தும், ஆட்டோவும் மோதிய விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்; மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் எம்.ஹனுமந்த் ராவ் கூறியதாவது:

விஜயவாடாவில் இருந்து திருப்பதிக்கு செல்லும் தனியார் பேருந்து, பல்நாடு மாவட்டத்தின் சிலகலூரிபேட் புறவழிச் சாலையில் வியாழக்கிழமை அதிகாலை பயணிகளை ஏற்றிக் கொண்டு, நரசராவ் பேட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. காலா மந்திர் சந்திப்பு அருகே சென்றபோது, தவறான பாதையில் வந்த ஒரு ஆட்டோ மீது பேருந்து வேகமாக மோதியது. இந்த விபத்தில் ஆட்டோவில் பயணித்த 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும் காவல் துறையினர் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு, உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். படுகாயமடைந்த சிலர், மேல் சிகிச்சைக்காக குண்டூர் அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் சிலகலூரிபேட்டில் உள்ள வேலூரு கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர். விபத்து தொடர்பாக காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்றார் அவர்.

விபத்தில் நேரிட்ட உயிரிழப்புகளுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் சந்திரபாபு நாயுடு, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சையை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராகப் பேசிய எஃப்.சி.ஐ. பெண் அதிகாரி?

விசாரணைக்கு உத்தரவு

ஜம்மு, ஆக.27: இந்திய உணவு கழகத்தை (எஃப்.சி.ஐ.) சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர், இந்தியாவுக்கு எதிராக பேசுவது போன்ற விடியோ பரவி வரும் நிலையில், அதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிறுவனமான எஃப்.சி.ஐ.யைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர், காஷ்மீரை இந்தியா ஆக்கிரமித்து, தொடர்ந்து அங்கேயே இருப்பது அநீதி என்று பேசுவது போன்ற விடியோ, சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அந்த பெண், எஃப்.சி.ஐ.யில் தரம் சரிபார்ப்பு பிரிவில் மேலாளராகப் பணிபுரிவதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து எஃப்.சி.ஐ. பொது மேலாளர் ஐ.கே. சௌதரியிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், இந்த விவகாரத்தை முக்கியப் பிரச்னையாக கருதுவதாகவும், இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவித்தார். அந்தப் பெண்ணுக்கு விளக்கம் கேட்டு வெள்ளிக்கிழமை நோட்டீஸ் அனுப்ப இருப்பதாகவும், விசாரணையில் விடியோவில் இருக்கும் குரல் அவருடையதுதான் என பெண் ஒப்புக் கொண்டாலோ, விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டாலோ அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்தியன் வங்கி — சின்ன காஞ்சிபுரம் கிளை
எண்.32A, வையாபுரி கோவில் சன்னதி தெரு, சின்ன காஞ்சிபுரம் - 631 501. தொலைபேசி : 044-27259130.
மின்னஞ்சல் : chinnakancheepuram@indianbank.bank.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8 மற்றும் 9-க்கு ஏற்ப கடன்தாரர் : **(1) திரு. S.T. கோவிந்தராஜன், (கடன்தாரர்)**, த/பெ தீர்த்தகிரி, எண்.13 A, கிருஷ்ணசாமி தெரு, சின்ன காஞ்சிபுரம், **(2) திரு. G. பொன்மொழி, (ஜாமீன்தாரர்)**, த/பெ S.T. கோவிந்தராஜன், எண்.13 A, கிருஷ்ணசாமி தெரு, சின்ன காஞ்சிபுரம், ஆகியோருக்கு **11.02.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.9,56,833/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று மட்டும்)** அத்துடன் 11.02.2026 முதல் வட்டி மற்றும் தற்செயலான கட்டணங்களுடன் மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் விதி 8 மற்றும் 9-க்கு இணங்கவும், **25 ஆகஸ்ட் 2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அடையான சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.10,38,183/- (ரூபாய் பத்து லட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று என்பத்து மூன்று மட்டும்)** அத்துடன் 25.08.2026 முதல் வட்டி மற்றும் தற்செயலான கட்டணங்களுடன் சேர்த்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்து : கதவு எண்.13/13A, குயவர் தெரு (என்கிற) கிருஷ்ணசாமி தெரு, பழைய T.S. எண்.357/2, புதிய T.S. எண்.357/2B & 2D, காஞ்சிபுரம் நாலூகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 546.00 சதுர அடி மொத்த பரப்பளவு, 546.00 சதுர அடி கட்டப்பட்ட அளவு, திரு. T. கோவிந்தராஜன் அவர்களுக்கு சொந்தமானது. எல்லைகள் - வடக்கில் : இ அட்டவணை பகுதி, தெற்கில் : அ அட்டவணை பகுதி & குயவர் தெரு (என்கிற) கிருஷ்ணசாமி தெரு, கிழக்கில் : திரு பச்சையப்பா உடையார், திரு சுப்ரமணி உடையார் & திரு தனிகைமலை உடையார் அவர்களின் சொத்து மற்றும் 6.0 அகல பொது பாதை, மேற்கில் : திரு. M. மணி & திரு. M. ரவி அவர்களின் சொத்து.

தேதி : 25.08.2026
இடம் : காஞ்சிபுரம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

பாங்க் ஆஃப் பரோடா / வங்கி ஆஃப் பரோடா / Bank of Baroda — மாங்காடு கிளை
எண். 2, SS கோவில் தெரு, மாங்காடு, சென்னை-600122. தொலைபேசி: 044 -26792109
மின்னஞ்சல்: mangad@bankofbaroda.co.in

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3க்கு ஏற்பவும், **கடன்தாரர் திரு. அருள்பிரகாஷ்** 5, த/பெ. ஸ்ரீராம், எண்.36/A இரண்டாவது தளம், வைத்தியநாதன் தெரு, ஷெனாய் நகர் நுங்கம்பாக்கம், சென்னை-600030 இல் வசிக்கிறார். **15.06.2026** தேதிப்படி செலுத்தவேண்டிய தொகை **ரூ. 12,65,499.89/- (பன்னிரண்டு கிலோசத்து அறுபத்தைந்தாயிரத்து நானூற்று தொண்ணூற்றொன்பது மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும்)** மேலும் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி, மேலதிக வட்டி, இதர கட்டணங்கள், ஆகியவற்றை 60 நாட்களுக்குள் சேர்த்து செலுத்தக்கோரி **16.06.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப் படுவது என்னவெனில், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதிமுறைகளின் விதி 8க்கு இணங்கவும், **25.08.2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அசையா சொத்தினை சுவாதீனம் எடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர்/அடமானதாரர் பொதுவாக பொது மக்களுக்கு எச்சரிக்கப்படுவது என்னவெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்துக்கள் **பாங்க் ஆஃப் பரோடா வங்கிக்கு** செலுத்த வேண்டிய தொகையான **ரூ. 12,86,896.09/- (பன்னிரண்டு கிலோசத்து என்பத்தி ஆறாயிரத்து எண்ணூற்று தொண்ணூத்தாறு மற்றும் பைசா ஒன்பது மட்டும்)** மேலும் வட்டி, மேலும் எதிர்கால வட்டி, மேலதிக வட்டி மற்றும் இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டத்தின் 13(8) விதிகளின்படி பாதுகாப்பு மற்றும் அதன் விதிகளுக்காகவும் தங்கள் கவனத்திற்காகவும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலூகா, மேப்பூர் கிராமம் சர்வே எண் 121-ன் மனைப்பிரிவின் ஒப்புதல் எண். PPD/LO. எண். 109/2006 மனை எண் 72 கோல்டன் சிட்டியில் துறைஞாத்தில் பிளாட் எண். G-2ன் கட்டுமான ரப்பு 400 சதுர அடி அதனுடன் 1490 சதுர அடி நிலத்தில் 198 சதுர அடி பிரித்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம் நிலத்தில் உரிமையுள்ள நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். இச்சொத்து திரு. அருள் பிரகாஷ் 5 த/பெ. திரு. ஸ்ரீராம் வெறில் உள்ளது. **எல்லைகள்: வடக்கு** : 24 அடி அகல சாலை; **தெற்கு** : சர்வே எண் 120-ன் காலி மனை; **கிழக்கு** : மனை எண் 71; **மேற்கு** : நல சக்தி நகரில் உள்ள மற்றொரு மனை. இச்சொத்து குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.

இடம்: மாங்காடு; தேதி: 25.08.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாங்க் ஆஃப் பரோடா

Karur Vysya Bank — Smart way to bank
சென்னை - ஸ்ரீபெரும்புதூர் கிளை
எண். 122 & 123, காந்தி ரோடு, ஸ்ரீபெரும்புதூர், சென்னை - 602105
தமிழ்நாடு

கடன் பெற்றவர்/ உத்தரவாதம் அளித்தவர் / அடமானதாரர்களுக்கு அறிவிப்பு

Reg: M/s.LS டிரேடிங் நிறுவனத்தின் கடன் கணக்கில் உள்ள கடன் தொகையை இரும்பெறுவதற்கான பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு.

பெறுநர்,

கடன்தாரர்கள்: 1.M/s. LS டிரேடிங், மனை எண்.18, புதிய எண்.42, பழைய எண்.105, ஜெஜி நகர், பட்டுநூல்சத்திரம், ஸ்ரீபெரும்புதூர், தமிழ்நாடு - 602105. **2.Mrs.சுதந்திரகொடி, 3.Mr.M.மாரிமுத்து, இருவரது முகவரி,** எண்.5 மூகாம்பிகை அவென்யூ, கிழக்கு சித்தூரதமேடு திருநின்றவூர், திருவள்ளூர் - 602024, **மேலும் முகவரி,** எண்.9 EVR தெரு, பாரதியார் நகர், பட்டாபிராம், திருவள்ளூர் - 600072 **4.Mrs.J.லாவண்யா, 5.Mr.ஜலந்தின், இருவரது முகவரி,** மனை எண்.5, A செக்டார், 1வது அவென்யூ, சிவசக்தி நகர், அன்னனூர், திருவள்ளூர் - 600062

NPA தேதி: 15.07.2026 கிளை: சென்னை-ஸ்ரீபெரும்புதூர்

கடன் அளித்த வங்கியில் உள்ள கடன் நிறுவனத்தொகையை திரும்ப செலுத்த நீங்கள் தவறிவிட்டபடியால், செலுத்த வேண்டிய தொகையான 03.08.2026 அன்றுள்ளபடி [i]Cash Credit Open Loan (1219223000000012) - ₹ 1,54,04,420/- + ii) Short Term Loan - Sec – EMI (1219782000000128) - ₹ 19,28,956.78] ₹ **1,73,33,376.78** (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து மூன்று லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று எழுபத்து ஆறு மற்றும் பைசா எழுபத்து எட்டு மட்டும்) மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளை திரும்பச் செலுத்துமாறு பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டத்தின் கீழ் **04.08.2026** தேதியிட்ட அறிவிப்பு ஒன்றை வங்கி மேற்கண்ட முகவரிக்கு அனுப்பியது.

உங்களுக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் என்களுக்கு திரும்பி வந்துவிட்டன. எனவே நீங்கள் வங்கிக்கு வந்து அறிவிப்பின் நகலை பெற்று கடனாகவிபறிய முழு விவரங்கள், வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனளவுகள் குறித்து அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கடன்தொகையை திரும்ப செலுத்தும் காலம் வரை வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் மேற்சொன்ன தொகையை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன் அளித்த வங்கியானது பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டத்தின்படி வங்கி வசம் பிணை / அடமானம் வைத்துள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை சுவாதீனப்படுத்தும் நடவடிக்கையை வங்கி மேற்கொள்ளும்.

அடமானத்திலுள்ள சொத்துக்கள் விவரம்

ஜட்டம் எண்.1: வட சென்னை பதிவு மாவட்டம், திருவொற்றியூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.166 பகுதி, **எர்னாவூர் கிராமம், திருவொற்றியூர் தாலூகா, சென்னை மாவட்டம், HIG பிளாட் எண்.B-12, இரண்டாவது தளம், ப்ளாக் எண்."B", (156 HIG பிளாட்ஸ்) எர்னாவூர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டம், ஜெப்தல் நகர், (TNHB), எர்னாவூர், சென்னை - 600057** என்னும் முகவரியில் **46.00 சதுர மீட்டர் (அல்லது) 495.144 சதுர அடி பிளாட் (பிளாட்டின் கட்டட பரப்பு) மற்றும் 41.58 சதுர மீட்டர் (அல்லது) 447.57 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: பிளாட் எண்.B-11, தெற்கு: 20 அடி ரோடு, கிழக்கு: பிளாட் எண்.C-9, மேற்கு: படிக்கட்டுகள் & பிளாட் எண்.B-9.

ஜட்டம் எண்.2: ஆவடி பதிவு மாவட்டம், பூந்தமல்லி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.88/12 (பகுதி) மற்றும் 88/13A (பகுதி) பட்டா எண்.3475 படி புதிய சர்வே எண்.88/75 மற்றும் 88/76, 07.02.2014 தேதியிட்ட C.M.D.A. No. P.P.D./L.O.No.04/2014 படி **"பூந்தமல்லி பார்ம்ஸ்" என பெயரிடப்பட்ட லேஅவுட், மனை எண்.228-C, சூரஞ்சேரி கிராமம், ஆவடி தாலூகா, திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 32.7 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 25.9 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 32.2 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 31.4 ½ அடி ஆகமொத்தம் **916 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் அமைந்து உரிமைகள் மற்றும் அனுபந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.88 (பகுதி), தெற்கு: மனை எண்.228-B, கிழக்கு: மனை எண்.229, மேற்கு: 16 அடி அகல ரோடு.

ஜட்டம் எண்.3: பழைய சர்வே எண்.830/17 மற்றும் 830/4B, பட்டா எண்.8436 படி புதிய சர்வே எண்.830/17A, **மனை எண்.5-ன் கிழக்கு பகுதி, முகாம்பிகை அவென்யூ, நாதமேடு கிராமம், திருவள்ளூர் தாலூகா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு - 602024** என்னும் முகவரியில் வடக்கு பக்கம் 30 அடி, தெற்கு பக்கம் 30 அடி, கிழக்கு பக்கம் 30 அடி, மேற்கு பக்கம் 30 அடி ஆகமொத்தம் **900 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்.** எல்லைகள்: வடக்கு: மனை எண்.6, தெற்கு: 30 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.9, மேற்கு: Mr.M.ரத்தினமுத்து-க்கு சொந்தமான மனை எண்.5-ன் மீதமுள்ள பகுதி.

தேதி: 04.08.2026
இடம்: தாம்பரம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

பஞ்சாப் நேஷனல் வங்கி / पंजाब नैशनल बैंक — ...the name you can BANK upon!
SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப